செய்தி வெளியீடு

உடனடி பிரசுரத்திற்காக

# கவின்கேர் & எபிலிட்டி ஃபவுண்டேஷன் என்ற இரு அமைப்புகளும் இணைந்து ஊனமுற்ற சாதனையாளர்களை கௌரவிக்கும் 16-வது கவின்கேர் எபிலிட்டி விருதுகள் 2018

நாடு முழுவதிலுமிருந்து தேர்வுசெய்யப்பட்ட 6 சாதனையாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்

**சென்னை**, 2018 **பிப்ரவரி 03 :** எஃப்எம்சிஜி துறையில் பல்வேறு பிரபல தயாரிப்பு பொருட்களை வழங்கிவரும் பெருநிறுவனமான கவின்கேர் பிரைவேட் லிமிடெட் மற்றும் தேசியளவிலான தொண்டு நிறுவனமான எபிலிட்டி ஃபவுண்டேஷன் ஆகியவை, 16வது கவின்கேர் எபிலிட்டி விருதுகள் 2018-ல் சிறப்பான சாதனை படைத்த 6 ஊனமுற்றவர்களை இன்று கௌரவித்தது. சென்னையின் சேத்துப்பட்டில் அமைந்துள்ள ஸ்ரீ முத்தா வெங்கடசுப்பாராவ் கலையரங்கத்தில் நடைபெற்ற விருதுகள் வழங்கும் நிகழ்வானது, சிறப்பான வெற்றியை எட்டியிருக்கும் ஊனமுற்ற சாதனையாளர்களை அங்கீகரித்து அவர்களை பலரும் அறியுமாறு செய்தது.

பிரபலமான ராப் பாடகரும் மற்றும் இந்நிகழ்வை தொகுத்து வழங்கியவருமான பிளாஸே அவர்களின் ஒரு ராப் பாடலோடு இந்நிகழ்வு தொடங்கியது. சைகை மொழியில் அமைந்திருந்த அவரது அறிமுக ராப், இந்நிகழ்வில் பலத்த வரவேற்பைப் பெற்றது. பிரபல நடிகரும், நாட்டிய கலைஞருமான வினித்-ன் நாட்டிய நிகழ்ச்சி பார்வையாளர்களை பெரிதும் கவர்ந்தது.

அதை தொடர்ந்து, விருதுகளைப்பெறும் சாதனையாளர்களின் வருகை, அரங்கில் கூடியிருந்த ஒட்டுமொத்த பார்வையாளர்களையும், உத்வேகப்படுத்தி அவர்களின் உற்சாக வரவேற்பையும், கைதட்டலையும் பெற்றது. மிகப்பெரிய சாதனைகளை நிகழ்த்தியிருக்கும் இந்த 6 ஊனமுற்றவர்களும், மிகப்பெரிய தடைகள், சோதனைகள், போராட்டங்கள் ஆகியவற்றை சமாளித்து வெற்றியினை கைவசப்படுத்தியிருக்கின்றனர். விருதுபெறுபவர்கள் குறித்து அறிந்துகொள்ளவும், அவர்களது பாராட்டுதலுக்குரிய சாதனைகளை அறிந்து பாராட்டி மகிழவும், பார்வையாளர்களுக்கு விளக்கங்கள் வழங்கப்பட்டன. விருதுகளைப் பெற்றவர்கள் மட்டுமின்றி இந்நிகழ்வில் பங்கேற்ற பார்வையாளர்களும், உத்வேகமும், ஊக்கமும் பெற்ற நபர்களாக இந்நிகழ்வின் முடிவில் வெளியேறினர் என்று கூறுவது மிகையல்ல.

16வது ஆண்டில் பயணிக்கும் இந்த கவின்கேர் எபிலிட்டி விருதுகள், ஊனமுற்றவர்கள் செய்திருக்கும் பாராட்டுதலுக்குரிய உயரிய சாதனைகளை அங்கீகரித்து கௌரவித்திருக்கிறது. ஊனம் குறித்து சமுதாயத்தில் நிலவுகின்ற மனப்பான்மைகளை சவாலுக்கு உட்படுத்தி, ஒரே மாதிரியான மரபுகளை உடைத்தெறிந்து புதிய பாதைகளை அமைக்கின்ற திறனுக்கும், மனஉறுதிக்கும் இவ்விருதை பெற்றிருக்கிற 80-க்கும் அதிகமான சாதனையாளர்கள் சான்றாக இருக்கின்றனர்.

கவின்கேர் பிரைவேட் லிமிடெட்-ன் தலைவர் & நிர்வாக இயக்குநரான திரு. சி.கே ரங்கநாதன் மற்றும் எபிலிட்டி ஃபவுண்டேஷனின் நிறுவனரும், கௌரவ செயல் இயக்குநருமான திருமதி. ஜெய்ஸ்ரீ ரவீந்திரன்

<u>செய்தி வெளியீடு</u>
உடனடி பிரசுரத்திற்காக

ஆகியோரின் ஒருங்கிணைந்த சீரிய சிந்தனையில் விருதுக்கான கரு உருவானது. ஊனமுற்றவர்களிடம் மறைந்திருக்கும் திறன்களையும் சாதனைகளையும் உலகறியுமாறு செய்வதே இவ்விருதுகளின் நோக்கமாகும். தங்களது கனவுகளை நிஜமாக்குவதற்காக மிகப்பெரிய தடைகளை கடந்து வெற்றிகண்டிருக்கின்ற இவர்களை பாராட்டுவதோடு, அச்சாதனையாளர்களை கௌரவித்து பலரும் அறியுமாறு செய்வதில் இவ்விருதுகள் வெற்றிகண்டிருக்கின்றன.

விருதுகள் வழங்குவதற்கான இந்த ஆண்டின் நிகழ்வு குறித்து பேசிய **கவின்கேர் நிறுவனத்தின் தலைவரும் நிர்வாக இயக்குநருமான திரு. சி.கே ரங்கநாதன்,** "சாதிப்பதற்கான திறன்களையும், கற்பனைக்கும் எட்டாத சக்தியையும் வெளிப்படுத்துகிற மாபெரும் திறமை கொண்ட ஊனமுற்றவர்களுக்கு வழங்கப்படும் கவின்கேர் எபிலிட்டி விருதுகள் ஒவ்வொரு ஆண்டும் எங்களை ஊக்குவிக்கும் உந்துசக்தியாக இருந்துவருகின்றன. தங்களது சாதனைகளின் மூலம் பிரமிப்பிலும், வியப்பிலும் தங்களை திரும்பிப்பார்க்குமாறு செய்த சாதனையாளர்களை கொண்டாடுகின்ற ஒற்றை குறிக்கோளைக் கொண்டதாக 16 ஆண்டுகளுக்கு முன்பு இப்பயணம் தொடங்கியது. இன்றைக்கு அத்தகைய சாதனையாளர்களை அடையாளம்கண்டு கௌரவிக்கிற இந்த மேடையில் நாங்கள் நிற்கின்றபோது, மகிழ்ச்சியும், மனநிறைவும் கலந்த உணர்வு எங்களது இதயத்தில் முழுமையாக நிறைந்திருக்கிறது. தன்மீதே அசையாத நம்பிக்கை கொண்டிருப்பதே வெற்றிக்கான வழியாக எப்போதும் இருக்கிறது என்ற உண்மையை கவின்கேர் எபிலிட்டி விருதுகள் எங்கள் அனைவருக்கும் கற்றுத் தந்திருக்கிறது," என்று கூறினார்.

**எபிலிட்டி ஃபவுண்டேஷனின் நிறுவனரும், கௌரவ செயல் இயக்குநருமான திருமதி. ஜெய்ஸ்ரீ ரவீந்திரன்** பேசியதாவது : "உடல் ஊனம் என்ற பிரச்சினையை இந்தியா கருத்தூன்றி கவனித்து புரிந்துகொள்வதும் மற்றும் பொதுமக்கள் இதுபற்றி கொண்டிருக்கும் மனப்பான்மையை மாற்றுவதும் மிக முக்கியமானது என்று நாங்கள் எப்போதுமே நம்பி வருகிறோம். எமது இலக்கை சென்றடைவதற்கான ஒரு மிக முக்கிய நடவடிக்கையாக இவ்விருதுகள் இருக்கின்றன. விருதுக்கான பரிந்துரைகளையும், பரிந்துரைக்கப்பட்டவர்களின் அறிக்கைகளையும் கவனமாக ஆராய்ந்து யாருக்கு விருது வழங்குவதென்று தீர்மானிப்பதற்கு அறிவார்ந்த நடுவர்கள் குழு அவசியம் என்பதால் இந்த விருதுகளை வழங்குவது உண்மையிலேயே சவால்மிக்கதாகும். இந்த செயல்முறையில் நடுவர்குழுவின் உறுப்பினர்களது கருத்துகளும், மனப்பான்மையுமே, ஊனமுற்றவர்களின் பிரச்சினைகளையும், சாதனையாளர்களின் சிறப்பான திறன்களையும் நன்கு உணரும்படி செய்தவிடுகிறது. ஒவ்வொரு ஆண்டும் இந்த விருதுகளை வழங்குவது சவால்மிக்கதாகவும் அதேநேரத்தில் பயனளிப்பதாகவும் இருக்கிறது."

தேசியளவில் புகழ்பெற்ற நபர்களை உள்ளடக்கிய கௌரவமிக்க நடுவர்களின் குழு ஒவ்வொரு ஆண்டும் விருதுகளுக்காக பரிந்துரைக்கப்பட்டு குறும்பட்டியலுக்கு தேர்வுசெய்யப்பட்டவர்களை பிராந்திய பிரதிநிதி நேரில் சந்தித்து அவர்கள் மீது எடுத்த திரைப்படங்களையும் மற்றும் அறிக்கைகளையும் அலசி ஆய்வுசெய்து, விருதுபெறும் சாதனையாளர்களை தேர்வுசெய்கிறது.

தேசியளவிலான அனைத்து ஊடகங்களில் விளம்பரங்கள் வழியாகவும் மற்றும் பிற அமைப்புகள் வழியாகவும் இந்நிகழ்வுக்கு 3 மாதங்களுக்கு முன்பே விருதுகளுக்காக பரிந்துரை செய்யும் செயல்முறை தொடங்குகிறது. இவ்வாறு பெறப்பட்ட விண்ணப்பங்கள் நுணுக்கமாக ஆய்வுசெய்யப்பட்டு குறும்பட்டியலுக்கு

<u>செய்தி வெளியீடு</u>
உடனடி பிரசுரத்திற்காக

தேர்வுசெய்யப்பட்டன. பரிந்துரைக்கப்பட்டவர்களின் சிரம அளவுகள், தடைகளையும், எதிர்ப்புகளையும் சமாளித்து அவர்கள் பெற்ற வெற்றிகள் மற்றும் சாதித்த பணிகளின் தனித்துவப்பண்பு ஆகியவை விருதுக்கு தேர்வுசெய்யப்படுவதற்கான அடிப்படை காரணிகளாக இருக்கின்றன.

கவின்கேர் எபிலிட்டி அவார்ட்ஸ் ஃபார் எமினென்ஸ் மற்றும் கவின்கேர் எபிலிட்டி மாஸ்ட்ரி அவார்ட்ஸ் என்ற இரு வகையினங்களில் இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன.

தி எமினென்ஸ் விருது, சாதிப்பதற்காக மிகப்பெரிய தடைகளையும் கடந்து பயணித்திருப்பதோடு தனக்கென சொந்தமாக ஒரு அமைப்பை தொடங்கியதன் மூலம் சமுதாயத்திற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியிருக்கும் ஒரு நபரின் நேர்த்தியான சாதனையை பாராட்டி கௌரவிக்கிறது. இவ்விருதில், ஒரு பாராட்டுரை, ஒரு பரிசுக்கோப்பை மற்றும் ரொக்கப்பரிசாக ரூ. 2 லட்சம் ஆகியவை உள்ளடங்கும்.

தி மாஸ்டரி விருது, அவர்கள் விரும்பி பணியாற்றுகின்ற எந்தவொரு துறையிலும் அவர்கள் செய்துகாட்டியிருக்கிற வழக்கத்திற்கு மாறான சாதனைக்காக ஊனமுற்ற மூன்று அல்லது நான்கு சாதனையாளர்களுக்கு வழங்கப்படுகிறது. இவ்விருதைப் பெறுபவர்களுக்கு, ஒரு பாராட்டுச் சான்றிதழ், பரிசுக்கோப்பை மற்றும் ரொக்கப்பரிசாக ரூ. 1 லட்சம் ஆகியவை சேர்த்து வழங்கப்படுகின்றன.

**கவின்கேர் எபிலிட்டி சிறப்பு அங்கீகார விருது :** இவைகள் மட்டுமல்லாது, கவின்கேர் எபிலிட்டி சிறப்பு அங்கீகார விருது என்ற மற்றொரு விருதும் வழங்கப்படுகிறது. அங்கீகரிக்கப்படுகிற தலைவராக மிகச்சிறந்த சாதனைகளை தனிப்பட்ட அளவிலோ அல்லது ஒரு நிறுவன ரீதியாகவோ நிகழ்த்தி மக்கள் மனதில் மதிப்பையும், அங்கீகாரத்தையும் பெற்ற ஒரு மகத்தான ஊனமுற்ற சாதனையாளருக்கு இவ்விருது வழங்கப்படுகிறது. கௌரவ விருதான இதில் ஒரு பாராட்டுச்சான்றிதழும் மற்றும் ஒரு பரிசுக்கோப்பையும் இடம்பெறுகின்றன.

**இந்த ஆண்டின் சாதனையாளர்கள் :**

**கவின்கேர் எபிலிட்டி சிறப்பு அங்கீகார விருது :**

**டாக்டர். ஸ்ருதி மொகபத்ரா**
புவனேஸ்வர், ஒடிசா

டாக்டர். ஸ்ருதி மொகபத்ராவின் பணியானது, ஊனமுற்ற நபர்களின் உரிமைகள் மீதே எப்போதும் சிறப்பு கவனம் செலுத்தி வந்திருக்கிறது. ஊனம் பற்றிய தகவல் மற்றும் ஆதாரவள மையமான ஸ்வபிமான் என்ற அமைப்பின் நிறுவனராகவும், தலைமைசெயல் அலுவலராகவும் இவர் இருக்கிறார். இவரது சிந்தனையில் உருவான செயல்திட்டமான அஞ்சலி, அனைத்தையும் உள்ளடக்கிய மற்றும் ஆனந்தமாக கற்றலுக்கானதாகும். சந்தன் மற்றும் ஸ்வபலம்பான் போன்ற புதுமையான திட்டங்களை இவர் உருவாக்கி செயல்படுத்தியிருக்கிறார். இவருக்கு ஏற்படுத்திய ஒரு விபத்து நிகழ்ந்த நேரத்தில், கல்வி மற்றும் விளையாட்டு ஆகிய இரண்டிலுமே ஒரு சாதனையாளராக திகழ்ந்த இவருக்கு நிகழ்ந்த ஒரு விபத்தின் காரணமாக இவருக்கு

செய்தி வெளியீடு
உடனடி பிரசுரத்திற்காக

நாலங்கவாதம் (Quadriplegia) ஏற்பட்டது. இவ்விபத்துக்கு பிறகும்கூட தனது சாதனைப்பயணத்தை நிறுத்தாத இவர் முனைவர் பட்டப்படிப்பை முடித்ததோடு பல புத்தகங்களையும், 100-க்கும் அதிகமான கட்டுரைகளையும் எழுதியிருக்கிறார். அரசு மற்றும் குடிமை சமூகத்தின் பல முக்கியமான குழுக்களில் ஒரு உறுப்பினராக தீவிரமாக இயங்கி வருகிறார்.

**கவின்கேர் எபிலிட்டி எமினன்ஸ் விருது :**

**மஹந்தேஷ் கட்டிவலப்பா கிவாடசன்னவர்**
பெங்களுரு, கர்நாடகா

பார்வைத்திறன் பாதிப்புள்ள, ஊனமுற்ற மற்றும் விளிம்புநிலைக்கு தள்ளப்பட்ட நபர்களுக்கு திறனும் அதிகாரமும் வழங்குவதற்காக பணியாற்றிவரும் ‘சமார்த்தனம்’ என்ற அமைப்பின் நிறுவனராகவும், நிர்வாக அறங்காவலராகவும் மஹந்தேஷ் ஜி.கே. செயலாற்றி வருகிறார். அனைத்தையும் உள்ளடக்கிய மற்றும் எளிய அணுகுவசதியுள்ள கல்வி, திறன் மேம்பாடு, கலாச்சாரம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகியவற்றோடு பார்வையற்றவர்களுக்கான கிரிக்கெட் விளையாட்டுப்போட்டிகளை ஊக்குவித்தல் ஆகியவை ‘சமார்த்தனம்’ அமைப்பின் முனைப்புத்திட்டங்களுள் சிலவாகும். ஒரு கிரிக்கெட் விளையாட்டு வீரரான மஹந்தேஷ், இந்தியாவில் பார்வையற்றோருக்கான கிரிக்கெட் சங்கம் மற்றும் வேர்ல்டு பிளைண்டு கிரிக்கெட் லிமிடெட்-ன் தலைவராகவும் இயங்கி வருகிறார். எய்ட்ஸ் நோயை வராமல் தடுக்கவும் மற்றும் எச்ஐவி / எய்ட்ஸ் தொற்றுடன் வாழும் நபர்களுக்கு மறுவாழ்வு வழங்கவும் உழைக்கின்ற B கேர் அமைப்பின் நிறுவனர் – இயக்குநராகவும் இவர் இருக்கிறார்.

**கவின்கேர் எபிலிட்டி மாஸ்டரி விருது :**

**ராஜு இராமேஸ்வர் உப்ரேட்**
புனே, மஹாராஷ்டிரா

TIFR-ன் ஜெயண்ட் மெட்ரோவேவ் ரேடியோ டெலஸ்கோப்-ல் ஒரு பொறியியலாளராக ராஜு இராமேஸ்வர் பணியாற்றி வருகிறார். ஒரு கவிஞராகவும், எழுத்தாளராகவும் திகழும் இவருக்கு பிறக்கும்போதே ஏற்படும் எலும்புவளர்ச்சிக் குறைபாடு (Achondroplasia) பாதிப்பு இருக்கிறது. இதன் விளைவாக, குறைவான உயரமே உள்ள இவருக்கு முதுகுத்தண்டு மற்றும் நுரையீரல் தொடர்பான உடல்நல சிக்கல்களும் இருக்கின்றன. ஊனமோ, நிதிசார் பிரச்சினைகளோ அல்லது நிராகரிப்புகளோ தடையாக இருப்பதற்கு அனுமதிக்காத இவர் தகவல் தொழில்நுட்பத்துறையில் B.E. பட்டப்படிப்பை நிறைவுசெய்வதோடு பல்கலைக்கழக அளவில் முதலிடம் பெற்று சாதனை படைத்தவராவார். இன்றைக்கு ஒரு வெற்றிகரமான தொழில்முறை நிபுணராகவும் இவர் பணியாற்றி வருகிறார்.

<u>செய்தி வெளியீடு</u>
உடனடி பிரசுரத்திற்காக

**கௌரி சேகர் காட்கில்**

புனே, மஹாராஷ்டிரா

'எல்லோ' என்ற வெற்றிபெற்ற மராத்தி திரைப்படத்தில் கௌரி நடித்திருக்கிறார். சிறந்த குழந்தை நட்சத்திரம் என்ற தேசியளவில் சிறப்பு நடுவர் குழுவின் விருதை இது அவருக்கு பெற்றுத்தந்தது. டவுன்சின்ட்ரோம் உள்ள கௌரி சிறப்பு ஒலிம்பிக் போட்டிகளில் பல விருதுகளை வென்றிருக்கிறார் மற்றும் பல்வேறு பிரிவுகளில் தேசியளவிலான பிரபல நீச்சல் வீராங்கனையாகவும் இவர் திகழ்கிறார். முறையாக பயிற்சி பெற்ற பரதநாட்டிய நடனக்கலைஞரான கௌரி, சமூகவியலில் பட்டப்படிப்பை முடித்திருக்கிறார்.

**ஜாஸ்மினா கன்னா**

மும்பை, மஹாராஷ்டிரா

ஜாஸ்மினா கன்னா, கல்வியில் சாதனைகள் செய்வதற்கும் மற்றும் வெற்றிகரமான கேரியரை தொடர்ந்து மேற்கொள்வதற்கும் தனக்கு ஏற்பட்டிருக்கும் பெருமூளை வாதமோ (Cerebral Palsy) அல்லது சமூக ரீதியிலான தடைகளோ குறுக்கீடு செய்ய அனுமதித்ததில்லை. பள்ளிப்படிப்பை உயர்ந்த மதிப்பெண்களோடு முடித்த இவர், அரசியல் அறிவியலில் இளங்கலை பட்டப்படிப்பையும் மற்றும் சமூகவியலில் முதுகலைப்பட்டப்படிப்பையும் பெற்றிருக்கிறார். கணினி செயல்பாடுகள் மீது தீவிர ஆர்வமும் கொண்ட இவர் இதில் எண்ணற்ற பாராட்டு சான்றிதழ்களை பெற்றிருக்கிறார். கடந்த 7 ஆண்டுகளாக சின்டெல் இந்தியா நிறுவனத்தில் பணியாற்றிவரும் இவருக்கு எழுத்துப்படைப்புகள் மீதும் பேரார்வம் இருக்கிறது. ஊனமுற்றவர்களின் பிரச்சினைகளுக்கு குரல் கொடுக்கவும், போராடவும் அர்ப்பணிப்புள்ள செயல்வீரராகவும் இவர் இருந்து வருகிறார்.

**டாக்டர். ரோஷன் ஜாவத் ஷேக்**

மும்பை, மஹாராஷ்டிரா

ஒரு மோசமான இரயில் விபத்தின் காரணமாக கை, கால் துண்டிக்கப்பட்ட டாக்டர். ரோஷன் ஜாவத் ஷேக், வாழ்க்கையை மனஉறுதியுடன் தொடர முடிவுசெய்து நல்ல மதிப்பெண்கள் பெற்றதோடு ஒரு மருத்துவராக ஆக வேண்டுமென்ற கனவையும் கொண்டிருந்தார். இவரது ஊனம், 70%-க்கும் அதிகமாக இருக்கிறது என்ற காரணத்தின் அடிப்படையில் மருத்துவ கவுன்சில் சேர்க்கைக்கு அனுமதி மறுத்தபோது, இவர் நீதிமன்றத்தை நாடினார். இவருக்கு சாதகமாக நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதை தொடர்ந்து மருத்துவப்படிப்பை வெற்றிகரமாக நிறைவுசெய்த இவர் இன்றைக்கு ஒரு மருத்துவராக செயலாற்றி வருகிறார். அறுவைசிகிச்சை நிபுணராக ஆக வேண்டுமென்ற இலட்சிய இலக்கை கொண்டிருக்கும் இவர், முதுகலைப்பட்டப்படிப்பை மேற்கொள்ள இப்போது தன்னை தயார் செய்துவருகிறார்.

செய்தி வெளியீடு
உடனடி பிரசுரத்திற்காக

**கவின்கேர் பிரைவேட் லிமிடெட் குறித்து:**

கவின்கேர் பிரைவேட் லிமிடெட், தனிநபர் பராமரிப்பு, தொழில்முறை பராமரிப்பு, உணவுகள், பால்பொருட்கள், பானங்கள் மற்றும் சலூன்கள் ஆகிய துறையில் தொழிற்பிரிவுகளைக்கொண்டு, ஒரு பன்முக செயல்பாடுள்ள ஒரு FMCG பெருநிறுவனமாகும். இதன் பிராண்டுகள் தொகுப்பில் ஷாம்புகள் (சிக், மீரா, கார்த்திகா மற்றும் நைல்), ஹேர் வாஷ் பவுடர்கள் (மீரா மற்றும் கார்த்திகா), தேங்காய் எண்ணெய் (மீரா), ஃபேர்னஸ் கிரீம்கள் (ஃபேர் எவர்), டியோடரண்ட் மற்றும் டால்க் (ஸ்பின்ஸ்), ஊறுகாய்கள் மற்றும் நொறுக்குத்தீனிகள் (ருச்சி, சின்னிஸ் & கார்டன்), ஹேர் கலர்ஸ் (இன்டிகா), ரீடெய்ல் சலூன் தயாரிப்புகள் (ராகா புரொஃபஷனல்), பானங்கள் (மா), பால் பொருட்கள் (கவின்ஸ்), மற்றும் பியூட்டி சலூன்கள் (கிரீன் டிரென்ட்ஸ் & லைம்லைட்) ஆகியவை அடங்கும். இதன் பெரும்பாலான பிராண்டுகள் அவைகளுக்குரிய தயாரிப்பு வகையினங்களில் முதலிடத்தை தக்கவைத்துக் கொண்டிருக்கிற பிராண்டுகளாகும்.

நவீன சாதனங்கள் மற்றும் தொழில்நுட்ப திறன்கொண்ட ஒரு பிரத்யேக ஆராய்ச்சி மற்றும் உருவாக்கல் மையமானது (R&D), இந்த பல்வேறு துறைகள் முன்னேற்றம் காண்பதற்கு தொடர்ந்து பெரிதும் உதவுகிறது. இன்றைக்கு 1450 கோடி ரூபாய்க்கும் அதிகமான விற்றுமுதலைக் கொண்டிருக்கும் கவின்கேர், குறிப்பிடத்தக்க பல மைல்கற்களை எட்டி சாதனைகள் படைத்திருக்கிறது. தேசிய அளவிலான சந்தையில் மிக வலுவாக காலூன்றுவதற்காக மிகப்பெரியளவில் சந்தையாக்கல் செய்வதற்கான யுக்திகளையும், அம்சங்களையும் இந்நிறுவனம், மிகச்சரியாக புரிந்துகொண்டிருக்கிறது. 'வாடிக்கையாளர்களுக்கு அதிகபட்ச திருப்தியை தருகின்ற தனிச்சிறப்பான தயாரிப்புகள் மற்றும் சேவைகளை தொடர்ச்சியாக வழங்குவதன் மூலம் ஒரு ரோல் மாடலாக திகழ்ந்து வளர்ச்சியை நாங்கள் எட்டுவோம்' என்ற அதன் கார்பரேட் செயல்நோக்கம் மற்றும் திட்டத்தின் மீது வலுவான அடித்தளத்தை அமைத்திருப்பதே கவின்கேரின் வெற்றிக்கு காரணமாகும்.

**எபிலிட்டி ஃபவுண்டேஷன் குறித்து:**

அந்த காலகட்டத்தைவிட தொலைநோக்கு சித்தாந்தத்துடன் 1995ம் ஆண்டில் நிறுவப்பட்ட எபிலிட்டி ஃபவுண்டேஷன், பல்வேறு ஊனங்களை கொண்டிருக்கும் நபர்களுக்காக தேசியளவில் மிகச்சிறப்பாக பணியாற்றும் உயரிய அமைப்பாக இன்றைக்கு உயர்ந்திருக்கிறது. நாடெங்கிலுமுள்ள ஊனமுற்றோர்களுக்காக பணியாற்றி வரும் இது, ஊனமுள்ள ஒவ்வொருவருக்கும் சமவாய்ப்புகள் உள்ள சமுதாயம் அமைந்திட வேண்டும் என்ற இலக்கை நோக்கி தளர்வின்றி தொடர்ந்து பணியாற்றி வந்திருக்கிறது.

சென்னையில் தலைமையகத்தைக் கொண்டிருக்கும் இந்த ஃபவுண்டேஷன், ஊனமுற்றவர்களுக்கு ஆற்றலையும், அதிகாரத்தையும் ஏதுவாக்கி அவர்களது திறன்கள் வெளிப்படுமாறு செய்வதில் தனது முழு கவனத்தையும் செலுத்திவருகிறது. அத்துடன், ஊனமுற்றோர்கள் மற்றும் ஊனமற்ற பிற மக்களுக்கிடையே உள்ள இடைவெளியை நிரப்பும் பணியையும் இது தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

CavinKare
Making Lives Happier

ABILITY FOUNDATION
Looking Beyond Disabilities & Breaking Barriers Together

செய்தி வெளியீடு
உடனடி பிரசுரத்திற்காக

தகவல் பரவலாக்கம், ஆலோசனை, அனைத்தையும் உள்ளடக்கிய முழுமையான கல்வியை முன்னிலைப்படுத்தல், பணி அமைவிடத்தில் பன்முகத் தன்மை, உரிமைகள் மற்றும் பொது கொள்கை ஆகியவை எபிலிட்டி ஃபவுண்டேஷன் பங்களிப்பு நல்கி, ஈடுபாட்டுடன் செயலாற்றி வருகின்ற தளங்களாகும். இந்நோக்கங்களுக்காக பிரசுரித்தல், பணி வாய்ப்பு வழங்கல், ஊடகம், கலாச்சாரம், கொள்கை அமலாக்கம், சட்டம் இயற்றல் மற்றும் மனித உரிமைகள் என பல துறைகளில் இந்த அறக்கட்டளையின் செயல்பாடுகள் நீள்கின்றன.

மக்களின் மனப்பான்மைகள் மற்றும் மனிதர்களால் உருவாக்கப்பட்ட தடைகளை போல ஊனம் என்பது, வளர்ச்சியையோ, சாதனைகள் நிகழ்த்துவதையோ தடைசெய்கின்றதாக இருப்பதில்லை என்ற உறுதியான நம்பிக்கையின் அடிப்படையில் எபிலிட்டி ஃபவுண்டேஷன் பணியாற்றி வருகிறது. சரியான நேரத்தில் சரியான வாய்ப்புகள் வழங்கப்படுமானால். இன்னும் அதிகளவில், மிகப்பெரிய சாதனைகளும், வெற்றிகளும் சாத்தியமே. இதற்கு வேண்டியதெல்லாம், ஒரு திறந்த மனதே.

**எபிலிட்டி ஃபவுண்டேஷன்**
4, மூன்றாவது குறுக்குத்தெரு,
இராதாகிருஷ்ணன் நகர், திருவான்மியூர்,
சென்னை – 600 041. தொலைபேசி : 91 44 2452 0016
ability@abilityfoundation.org
www.abilityfoundation.org

## RSVP:

பவித்ரா லக்ஷ்மணன் | **தொலைபேசி :** +91 98409 96840 | **மின்னஞ்சல் :** pavithra@brand-comm.com